**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 353 /ஆ2/2023, நாள் : 25.01.2023.**

பொருள்: வேலூர் மாவட்டம் – பள்ளிக் கல்வித் துறை சார்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அளவிலான பாரதியார் தின – குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகள் 09.02.2023 முதல் 12.02.2023 வரை நடைபெறுதல் – சார்பாக.

பார்வை: கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 76/2022, நாள்.10.01.2023.

#######

பார்வையில் காணும் கடிதத்தின்படி பள்ளிக் கல்வித் துறை சார்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அளவிலான பாராதியார் தின – குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகள் (டேக்வோண்டோ, வாள்வீச்சு, கடற்கரை கைப்பந்து) 09.02.2023 முதல் 12.02.2023 வரை நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வேலூர் மாவட்டத்தில் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசு / அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகள் நடத்திட தமிழக அரசால் உத்தரவு பெறப்பட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கையுந்துபந்து, வாள்சண்டை மற்றும் டேக்வோண்டோ ஆகிய போட்டிகளை 09.02.2023 முதல் 12.02.2023 வரை நடத்திட தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை ஆணையாளரால் அறிவுரை பெறப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்கு பெற செல்லும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கும், நடுவர்கள், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் மாணவ / மாணவிகள் அணி மேலாளர்கள் அனைவருக்கும் தங்குவதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, வேலூர் மாவட்டம் சார்பாக போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவிகள் மற்றும் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இத்துடன் இணைப்பில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அறிவுரைகளைப் பின்பற்றி போட்டியில் பங்கேற்கவும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அணி மேலாளர்களை தொடர்பு கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– பார்வைக் கடித நகல் –
14 பக்கங்கள்.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)/ தொடக்கக்கல்வி/தனியார் பள்ளிகள் வேலூர் மாவட்டம். (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)
2. அனைத்து அரசு/அரசு உதவிபெறும் உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
3. உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்.

நகல் – கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு
(தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது)

//ப.த.//